ஆறு

Registered as a Newspaper

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 15 செவ்வாய்க்கிழமை (29 06-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 213

# தடை நீக்கப்பட்ட பொருள்களை வடக்கே எடுத்து வருவதில் சிக்கல்!

## இறுதி நேரத்தில் அரசு பின்வாங்குகின்றது

கொழும்பு ஜூன் 29

யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்குப் பதிலாக, வடக்கே எடுத்துச் செல்வதற்குச் சில பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி, அவற்றை வடக்கே அனுப்ப இணக்கம் தெரிவித்திருந்த ஸ்ரீலங்கா அரசு, அந்த இணக்க நிலைப்பாட்டிலிருந்து கடைசி நேரத்தில் பின்வாங்கியிருக்கிறது

தடை நீக்கப்பட்டிருந்த பொருள்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை துறைமுகம் நோக்கி வந்து கொண்டிருக்கும் கப்பலை, காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கொண்டு செல்லும்படி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## உறவினர்கள் உடன் திரும்புவர்?

மணிலா, ஜூன் 29

யுத்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்க நிலை முறிவடைந்திருப்பதை அடுத்து —

யாழ்ப்பாணம் வந்து தங்கி நிற்கும் — யுத்தக் கைதிகளின் உறவினர்களை — உடனடியாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் மீண்டும் கொழும்புக்கு அழைக்க ஸ்ரீலங்கா அரசு ஆலோசித்து வருகிறது. பிரிகேடியர் ஆனந்த வீரசேகர 'வெரித்தாஸ்' வானொலிக்கு இத்தகவலைத் தெரிவித்தார்

## புலிகளுடன் அரசு பேசுவதை எதிர்ப்போர் கை ஓங்கியது!

யாழ்ப்பாணம், ஜூன் 29

யுத்தக்கைதிகளை விடுவிப்பது குறித்து விடுதலைப் புலிகளுடன் அரசு நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதையும்-

கைதிகளை விடுவிப்பதற்கு விடுதலைப்புலிகள் தெரிவித்த நிபந்தனையை ஏற்று வடக்கே எடுத்து வருவதற்கு சில பொருள்கள்மீதான தடையை நீக்குவதற்கு அரசு இணங்கியிருப்பதையும்-

எதிர்த்து வந்த பாதுகாப்பு உயரதிகாரிகளின் பக்கம் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் இப்போது கையோங்கியிருக்கிறது.

அதன் காரணமாகவே விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட இணக்க நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா அரசு திடீரென முறித்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி ஒருவர் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் புலிகள் அதிரடி!

## 2 ராணுவ வாகனங்கள் அழிப்பு

### சப் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

மன்னார் மாவட்டத்தில்— இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில்—நேற்று முன்தினம் இரவு 9-45 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத்தாக்குதலில் இராணுவத்தின் இரண்டு வாகனங்கள் நாசமாக்கப்பட்டன

மன்னார்த்தீவுக்கும், தள்ளாடி ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்கும் இடையில் வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து மன்னார் நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரூர் வாகனம் மீதும், அம்புலன்ஸ் மீதும் கறிச்சட்டி பாலத்தில் வைத்து விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் படையினரின் இரு வாகனங்களும் கடலில் பாய்ந்தன. பின்னர் இவ்விரு வாகனங்களையும் புலிகள் முற்றாக அழித்தனர்.

இத்தாக்குதலில் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும், கான்ஸ்டபிள் ஒருவரும் பலியானதாக இலங்கை வானொலி அறிவித்தது. (உ-3)

## புலிகள் மன்னாரில் கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ ரி 56 ரகத்துப்பாக்கி | — | 01 |
| ★ அதற்குரிய மகஸின் | — | 01 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 30 |
| ★ ஸி இஸட் 75 ரகக் கைத்துப்பாக்கி | — | 01 |
| ★ 9 மி.மீ ரவைகள் | — | 10 |
| ★ உயர்வலு தொலைத் தொடர்பு சாதனம் | — | 01 |

(உ-3)

## விடுதலைப் புலிகள் - ராணுவம் மட்டக்களப்பில் கடும் சண்டை

யாழ்ப்பாணம், ஜூன் 29

மட்டக்களப்பு மாவட்டம் மாவலங்கை பகுதியில் நேற்று முன்தினம் காலை 7.30 மணி முதல் சுமார் 4 மணி நேரம் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

இப்பகுதியில் அமைந்திருந்த புலிகளின் முகாமை படையினர் சுற்றி வளைக்க முயன்ற சமயம் சண்டை மூண்டது.

புலிகளின் முகாமைச் சுற்றி வளைப்பதற்காகப் பதுங்கியிருந்த படையினர், கத்திரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த புலிகளின் அணி ஒன்றின் மீது தாக்குதலை நடத்தினர். அத்தாக்குதலில் போராளிகள் இருவர் வீரமரணமடைந்த

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 5 போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த மோதல்களில் ஐந்து போராளிகள் வீரமரணமடைந்தனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ மேஜர் நளன் அல்லது ஏகாம்பரராஜ் (சரவணை விஜயகுமார் — கொம்மாந்துறை — செங்கலடி)

★ லெப்டினன்ட் கபில் ராஜ் (கோவிந்தபிள்ளை அரியரத்தினம் — களுவாஞ்சிக்குடி)

★ 2 ஆம் லெப்டினன்ட் ஸ்ரீபரதன் (ரட்ணம் யோகேந்திரன் — களுவாஞ்சிக்குடி)

★ லெப்டினன்ட் மைக்கல்ராஜ் கலைஞன் (கணபதிப்பிள்ளை சாம்பசிவம் — நாவலடி மட்டக்களப்பு)

★ 2 ஆம் லெப்டினன்ட் சுரேஷ் அல்லது அமரகாசன் (அந்தோனி மரியதாஸ் — நாவிதன்வெளி) (உ-3)

## 'வாதுவ' வந்து சேர்ந்தது

2 ஆயிரத்து 850 மெற்றிக் தொன் அரிசி உட்பட அத்தியாவசியப் பொருள்களுடன் 'வாதுவ' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்தது

யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு செ.பத்மநாதன் பருத்தித்துறைக்குச் சென்று கப்பலில் பொருள்களை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றதை அடுத்து கப்பலில் இருந்து அவற்றை இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பிக்கப்பட்டன.

இந்தக் கப்பலில் 238 பரல் மண்ணெண்ணை, 35 பரல் டீஸல் 200 பரல் தேங்காய் எண்ணெய், 52 பரல் தார் என்பனவும் எடுத்துவரப்பட்டுள்ளன.

60 மெற்றிக் தொன் தேயிலை, 100 மெற்றிக் தொன் பருப்பு, என்பனவும்—

யாழ். கல்வி அலுவலகத்துக்கான தளபாடங்கள், ஒரு தொகுதி பாடநூல்கள், சைக்கிள் டயர்—ரியூப், நீர் பம்பிகள் ஆகிய பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

(உ-5-17-162-87)

## மீண்டும் சமாதான முயற்சி ஆரம்பிக்க தொண்டா தயார்!

கொழும்பு, ஜூன் 29

''இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் சிங்களக் கட்சிகளிடம் இருந்தும் அநுகூலமான சமிக்ஞைகளை எதிர்பார்த்திருக்கிறேன். அவை கிடைக்குமானால் இனப்பிரச்சினைத் தீர்வு காண்பதற்கான எனது முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறேன்''

அமைச்சர் தொண்டமான் பி.டி.ஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் இப்படித் தெரிவித்திருக்கிறார் அப்பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது.

1991 இல் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு அதன் பயனுடைத்தன்மையை



இப்போது இழந்து விட்டது. வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து முடிவு செய்ய, சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கான சாத்தியத்தை ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு மேற்கொண்டதாகக் கூறப்படும் தீர்மானம் இந்த விடயத்தை மேலும் இனவாதமயப்படுத்துவதற்கே வழிவகுக்கும்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் சர்வஜன வாக்கெடுப்புக் குறித்து விதந்துரைக்கப்பட்டிருப்பது என அரசாங்கம் காரணம் காட்டக்கூடும். எவ்வாறாயினும் சர்வஜன வாக்கெடுப்பு பிரச்சினைக்குத் தீர்வாக இருக்கப் போவது...

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 471 தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 29

நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்த ''வாதுவ'' கப்பலில் வெளியூர் தபால்கள் அடங்கிய 471 பொதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன

இவை இன்று யாழ் பிரதம தபாலகத்திற்கு எடுத்து வரப்படும் என்றும்—

நாளை முதல் பொதுமக்களுக்கு தபால்கள் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5-17-162-87)

## கிளாலி படகு சேவை இன்று

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்றும் வழமையான நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். கல்வித்திணைக்கள நலன்புரிக்கழக

## நூல் நிலைய நிதி அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் (28-06-93)

1 ஆம் பரிசு இல:- **1694**
2 ஆம் பரிசு இல;- **5715**
3 ஆம் பரிசு இல:- **4056**

சி. தனபாலசூரியர்
பொதுச் செயலாளர்.

கல்வித் திணைக்கள
நலன்புரிக் கழகம்,
யாழ்ப்பாணம்.

(26287)



## நான்காண்டு நிறைவு நினைவஞ்சலி



## வீரவேங்கை மேஜர் ரஞ்சன்

வீரவேங்கையாய்:- 1968—02—27
மாவீரனாய்:- 1989—06—29

பன்னாலையின் பேரை
முன்னாலை கொண்டு வந்து
எந்நாளும் நினைக்கவைத்த
பொன்னான வேங்கையே!
செம்மலை அளம்பிலில்
களமாடி மண்சிவக்க
தன்மானத் தமிழ் வீரர்
மாவீரர் பதம் பெற்றால்
இம்மண்ணில் நீ வாழ்கின்றாய்
எந்நாளும் உன் புகழ் நிலைக்கும்

அன்பான
அப்பா, அம்மா,
சுற்றத்தார், நண்பர்கள்

பன்னாலை,
மதல்லிப்பழை.

(26285)


## இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 29

மருதனார்மடக் கோட்டத்தில் ஆரம்ப வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆரம்ப பாடசாலை அதிபர்கள், பகுதித் தலைவர்கள் ஆகியோருக்கான — ஆரம்பக்கல்வி வளமாக்கல் தொடர்பான — கருத்தரங்குகள் இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றன.

அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பராய் வயாவிளான் கொத்தணிகளைச் சேர்ந்தவர்களுக்கு இன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும்—

நவாலி, மானிப்பாய், உடுவில் சுன்னாகம், ஏழாலை கொத்தணிகளைச் சேர்ந்தோருக்கு நாளை இராமநாதன் கல்லூரியிலும் கருத்தரங்கு நடைபெறும்.

(உ-152-162)

## ஆலயங்களில்

சிறுப்பிட்டி தனங்கலட்டிப் பதி செல்லப் பிள்ளையார் ஆலய மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு தினமும் பிரம்மஸ்ரீ ச. ஈஸ்வரசர்மா நடத்தும் தெய்வீகப் பேருரைகளில் நாளை 30ஆம் திகதி ''மறவாதவர்க்கு ஒரு தாழ்வு இல்லை'' எனும் பொருளில் உரை நிகழ்த்தப்படும்.

(க)

o o o

அராலி மலையாளன்காடு அருள்மிகு ஸ்ரீ ஐயனார் ஆலய வருடாந்தப் பெரும் பொங்கல் இன்று காலை ஆரம்பமாகி விஷேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும். நண்பகல் 12 00 மணிக்கு ஐயனார் வீதிவலம் வருவார். அடியார்களின் காவடி ஆட்டமும் இடம்பெறும்.

(உ-30)

## பதவி உயர்வு பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 29

பொது எழுதுவினைஞர் சேவையின் அதி சிறப்பு வகுப்புக்கு (முதுமை அடிப்படையில்) பதவி உயர்வு பெறுவதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் இறுதி வாரத்தில் கொழும்பில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றத் தகுதி உள்ளவர்கள் கொழும்பு செல்வதற்கு கப்பல் வசதி செய்துதர முடியாது என்றும் —

அவர்கள் தாங்களே தமது பிரயாண ஒழுங்கைச் செய்து கொள்ள வேண்டும் என்றும் யாழ் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

(உ-5)

பிரிட்டிஷ் அரசு வழங்கிய

## உபகரணங்களை எடுத்துவர ஆஸ்பத்திரி குழு செல்லும்

அரியாலை, ஜூன் 29

பிரிட்டிஷ் அரசு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்த — ரூபா 15 கோடி பெறுமதியான— வைத்திய உபகரணங்களைக் கப்பலில் இங்கு எடுத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள யாழ். வைத்தியசாலையின் உயரதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று அடுத்துவரும் வாரத்தில் கொழும்பு செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

வைத்திய உபகரணங்கள் கப்பல் மூலம் இங்கு அனுப்பி வைக்கப்படும் என்று மகளிர் விவகார அமைச்சர் திருமதி

5 ஆம் பக்கம் பார்க்க)


## நாகம் பூசித்த நாகபூஷணியாள்

''அகிலாண்ட கோடியீன்ற அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும்'' என்றார் தாயுமானவர்.

தாயானவள் கன்னியாவதற்கு எந்தவித சாத்தியமுமில்லை. ''செம்பொற் கிண்ணத்தமுத ஞானம் சுரந்தளித்த உமையாள்'' சம்பந்தனுக்கு முலையால் ஞானப்பாலூட்டவில்லை. ''புவனம் பதினான்கினையும் பூத்தவண்ணம் காத்தவள்'' இவையெல்லாம் சக்தி தத்துவத்தின் உயர் தன்மைகளாகும். அவள் நித்திய கன்னி, உண்ணாமுலையாள் என்பதில் யாருக்கும் கூறுபட்ட அபிப்பிராயம் இருக்கமுடியாது இதுவே சைவ சக்தி வழிபாட்டின் சிறப்பு, பெருமை, மாட்சி என்பவற்றின் மகிமையாகும்.

இத்தகைய உமையாள் வீற்றிருக்கும் சக்தி பீடங்களில் ஒன்று, நாற்புறமும் கடலால் சூழப்பெற்ற சின்னஞ்சிறிய தீவு அதுமட்டுமல்லாமல் பென்னம்பெரிய புகழுடைய மணித தீவு புகழ்பெற்ற பிராமணர் குடிகொண்ட பிராமணத் தீவு இங்கு வீற்றிருக்கும் இறைவியே நாகபூஷணி. இவள் தென்வாயிலில் புவனேஸ்வரியாய் வீற்றிருப்பாள், ஏங்கிவரும் அடியார்க்கு இன்னல் தீர்ப்பாள், சப்த சாகரங்களிலிருந்து ஒங்கிவரும் ஓசை நாதமானது 'ஓம்', ''ஓம்'' எனப் பிரணவத்தினை வெளிப்படுத்தி நிற்கும் நாகர் வழிபட்ட நாகர் ''வழிபாடு'' முன்னைப் பழம் பெருமையுடையது. இதனால் போலும் படமெடுத்த பிணைந்த இரு நாகத்தை மருத்துவக் கல்லூரியினர் தமது இலச்சினையில் பொறித்திருப்பது உலகத் தோற்றுவாயின் அடையாளத்தைச் சுட்டிக் காட்டுவதாகும்.

ஆனி மாதத்தில் வரும் உற்சவங்கள் சில ஆண்டுகளாக பதினைந்தாக விஸ்தரிக்கப்பட்டபோது நயினை அரச ஊழியர்கள் பதினொராம் திருவிழாவைப் பெற்றனர். இது தண்டிகைத் திருவிழாவாக நடைபெற்று வருகின்றது. இவ்வுற்சவத்தன்று பகல் திருவிழாவின்போது கர்ப்பக்கிரகத்திலிருக்கும் செம்பினாலான பாம்பு கைலாய வாகனத்தில் உமையாள் சமேதரராய் சிவன் ஆரோகணித்து வீதியுலா வரும்போது எடுத்துவரப்படுவது பழமை; இது வழமை. இதனால் சப்ததீவுக் கடலும் கொந்தளிப்புக் குறைந்து அடியார்கள் பயணம் செய்யக் கூடிய பக்குவ நிலைக்குரிய அமைதியடைகின்றது.

அனலைதீவுக்கருகிலுள்ள புளியந்தீவிலுள்ள நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து உயர நாகபாம்புகள் செவ்வரத்தம் பூக்கள் கொண்டு வந்து அம்பாளைத் தரிசித்து போவதாக வரலாற்றுண்மையாகும் (இப்பாறையில் கருடன் பாம்பு சுற்றிய கல்லு இப்போதும் அடியார்கள் கண்ணுறக்காண முடியும்)

யோக சாதனையால் குண்டலினி சக்தியை சகஸ்ரதள கமலத்திற்கு அழைத்துச் சென்று வழிபடும் ஸ்ரீசக்கர பூசை (பெளர்ணமி தினங்களில்), ஆடிப்பூரம் என்பன மிகச் சிறப்பாக நடைபெறும் உற்சவங்களாகும்.

ஐந்நூறுக்கு மேற்பட்ட அரச ஊழியரைக் கொண்ட இத்திருவிழா நயினை மக்களில் பலரை உற்சவப் பங்காளிகளாக மாற்றிய பொதுமைத் திருவிழா என்பதில் சிறப்புடையது. உற்சவப் பங்காளிகள் அனைவருக்கும் அம்பாள் அருள் பாலிப்பாளாக.

11 ஆம் திருவிழா உபயகாரர்கள்
நயினை அரச ஊழியர்

இன்று 29 - 06 - 1993 செவ்வாய்க்கிழமை நயினை நாகபூசஷணி அம்மன் தண்டிகைத் திருவிழாவை முன்னிட்டு இவ்விளக்கம் வெளியிடப்படுகின்றது.

(26287)



வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய்

## இறைச்சிக்கடைக் குத்தகை-1993

1993 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் கீழ்க் குறிப்பிடப்பட்ட இரு இறைச்சிக் கடைகளையும் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 1993 07-14 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை அவ்வவ் உப அலுவலகங்களில் இதன் கீழ் உள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டவாறு கேள்வி வைப்புப் பணத்தையும், மீளளிக்கப்படாத பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் மூலம் 1993 - 07 - 13 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்களை தலைமை அலுவலகத்திலும், அவ்வவ் உப அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத பத்திரப்பணம் | நிர்ணயிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் கிராமம் | பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 100/- | 5,250 |
| பண்டத்தரிப்பு கிராமம் | மாகியப்பிட்டி ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 100/- | 21,000 |

விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்.
1993 - 06 - 28

(சி/5335)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

செல்வன் செ. இளங்கோ
[மேஜர் அழகன்]

தமிழின விடிவுக்காய்
தன்மான உணர்வுடன்
தன்னையே உவந்தளித்த
இள வேங்கை அழகனுக்கு - எம்
இதய அஞ்சலிகள்

ஆசிரிய மாணவர்கள்
முதலாம் ஆண்டு

(C/5411)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட பிராந்திய போக்குவரத்து சபை: மீண்டும் இயங்க வைக்க முயற்சி!

அரியாலை, ஜூன் 29

வட பிராந்திய போக்குவரத்துச் சபையை மீண்டும் இயங்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேற்படி சபையின் பொது முகாமையாளர் பா. ஜெயசிங்கம் தெரிவித்தார்.

வட பிராந்தியத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களுக்குத் தேவையான எரிபொருளின் அளவுகள் பற்றிய விவரம் கடந்த 23 ஆம் திகதி யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டதாக தெரிவித்த அவர், நாளொன்றுக்கு 45 ஆயிரம் லீற்றர் டீசலும், 45 ஆயிரம் லீற்றர் ஒயிலும் தேவைப்படுவதாகவும் சொன்னார்.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின்போது வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 300 பஸ்கள் சேதமடைந்துள்ளன. தற்போது போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்த இங்கு ஒரு பஸ் கூட இல்லை.

குறைந்த பட்சம் 40 பஸ்களையாவது முதல் இங்கு அனுப்பி வைக்கும்படி போக்குவரத்து அமைச்சிடம் தான் ஏற்கனவே கேட்டுள்ளதாகவும் கூறிய அவர் இது தொடர்பாக அடுத்த வாரமளவில் கொழும்பு சென்று போக்குவரத்து அமைச்சின் உயரதிகாரிகளுடன் பேச இருப்பதாகவும் சொன்னார். (த-17)

# எலுமிச்சை மர இலைகளில் சுரங்கப் புழுவின் தாக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

எலுமிச்சை மரக்கன்றுகளில் அண்மையில் பெய்த மழையுடன் தோன்றிய புதிய துளிர்களில் இலை சுரங்கப் புழுவினதும், வண்டுகளினதும் தாக்கம் தென்படுவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் விவசாய சூழல் பாதுகாப்புப் பகுதியினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலை சுரங்கப்புழு குருத்துக்களையே தாக்குகிறது. குருத்து பாதிக்கப்படுவதால் பயிர் பாதிக்கப்பட்டு விளைவு பாதிக்கப்படுகிறது. வண்டுகள் இலையை இரவில் சாப்பிடுகின்றன. மொத்தத்தில் இவற்றினது தாக்கத்தால் விளைவு பாதிக்கப்பட்டு எலுமிச்சைப் பழத்தின் விலை உயர்வடையும் நிலை ஏற்படும்.

இத்தாக்கத்தை கட்டுப்படுத்த டிப்ரெக்ஸ் 50% எல்சி அல்லது என்தோசான் அல்லது எல்சான் ஆகியவற்றுள் ஏதாவது ஒரு கிருமிநாசினியில் 28 மில்லி லீற்றரை 13.5 லீற்றர் நீரில் கலந்து விசிறும்படி மேலும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# பத்திரிகையாளர்களுக்கு பிரதமர் ரணில் அறிவுரை

கொழும்பு, ஜூன் 29

பத்திரிகையாளர்கள் தான்தோன்றித்தனமாகச் செயல்படக்கூடாது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பத்திரிகைச் சுதந்திரம் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

மார்கா நிலையத்தில் மார்கா நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் [illegible] காரிடியன் பத்திரிகை நிறுவனம் நடத்திய இக்கருத்தரங்கில் பிரதமர் உரையாற்றினார்.

தகவல்கள் நம்பகத்தன்மையுடன் வெளியிடப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் கருத்துகளுக்கு மட்டும் முக்கியத்துவமளிக்காமல் யாவரின் அபிப்பிராயங்களுக்கும் மதிப்பளித்து பத்திரிகையாளர் செயற்பட வேண்டும் என்றும் பிரதமர் சொன்னார்.

நவீன அச்சுக்கலை வளர்ச்சி அடைந்திருப்பதால் பத்திரிகை வெளியீட்டுத்துறை இன்றைய உலகில் ஒரு மாபெரும் தொழிலாக முன்னேறியுள்ளது இதனால் பத்திரிகையாளரின் பொறுப்புகளும் அதிகரித்து உள்ளன. ஆகவே தேர்ச்சி பெற்ற பத்திரிகையாளர்கள் தேவைப்படுகின்றனர். பத்திரிகையாளருக்குப் பயிற்சி அளிக்க தேசியத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது விரும்பத்தக்கது.

இது சம்பந்தமாக வெகுஜனத் தொடர்பு சாதனங்களும் பத்திரிகையாளர்களும் சமர்ப்பிக்கக் கூடிய ஆலோசனைகளை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்றும் பிரதமர் சொன்னார். (த-எ)

# 940 குடும்பங்கள் நிவாரணம் எதுவும் இல்லாமல் அவதி

திருநெல்வேலி, ஜூன் 29

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சுமார் 940 குடும்பங்கள் தற்போது எதுவித நிவாரணங்களும் இன்றிக் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த "இ" அட்டை நிவாரணம் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் இடைநிறுத்தப்பட்டது. அதனை ஆட்சேபித்து இடம்பெற்ற மறியற்போராட்டத்தைத் தொடர்ந்து விரைவில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை இவர்களுக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை. வறுமை நிவாரண முத்திரையும் வழங்கப்படவில்லை என்றும்- இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் அப்பகுதி பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-143)

## சிறுவருக்கு ஜீவனாகாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

பூம்புகார் நகீரன் குடியிருப்பிலுள்ள இடம்பெயர்ந்த 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு யாழ். வட்ட லியோக் கழகத்தினால் ஜீவாகாரம் வழங்கப்பட்டு வருகிறது. (இ)

## தமிழீழ பொதுக்கல்வி தேர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 29

தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கான கொடுப்பனவுகள் நாளை புதன்கிழமை மதிப்பீடு வேலைகள் நடைபெற்ற கல்விக் கோட்டங்களில் வைத்து வழங்கப்படும்.

பாடரீதியான பிரதம மேற்பார்வையாளர்கள் அவ்வவ் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிபாளர்களிடம் கொடுப்பனவு பட்டியலையும் பணத்தையும் பெற்று உரியவர்களுக்கு வழங்கலாம் என்றும்— கொடுப்பனவு பட்டியலை ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் தமிழீழக் கல்விக் கழகப் பணிமனையில் ஒப்படைக்க வேண்டும் என்று தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். (த)

## சின்னத்தம்பி ஞாபகார்த்தமாக

# மகப்பேற்று நிலையத்தின் பெயர் மாற்றப்பட்டது

கரவெட்டி அரசினர் மத்திய மருந்தக, மகப்பேற்று நிலையத்தின் பெயர் கரவெட்டி சின்னத்தம்பி ஞாபகார்த்த அரசாங்க வைத்தியசாலை என அண்மையில் மாற்றப்பட்டுள்ளது

புதிய பெயர் சூட்டும் வைபவம், வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சி. பொன்னம்பலம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

கொழும்பில் சுகாதார அமைச்சிலும், ஐக்கிய நாடுகள் உலக சுகாதார நிறுவனத்திலும் கடமையாற்றிய பிரபல மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் செல்வி சிவா சின்னத்தம்பி தனது தந்தையார் கேட் முதலியார் சின்னத்தம்பியின் ஞாபகார்த்தமாக இவ் வைத்தியசாலைக்குரிய காணியை அன்பளிப்புச் செய்திருந்தார்.

இப்புதிய பெயரை சுகாதாரத் திணைக்களம் ஏற்கனவே அங்கீகரித்திருந்தது. (த 109)

## செய்தியாளர் மாநாடுகளில்

# குற்றவியல் விசாரணை பற்றி பேச பொலீஸாருக்குத் தடை

செய்தியாளர்கள் மாநாடுகளில் சமூகமளித்து குற்றவியல் விசாரணைகள் பற்றி பேசக்கூடாது என்று பொலீஸார் பணிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி இப்பணிப்புரையை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடந்த செய்தியாளர் மாநாடுகள் சிலவற்றில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா, முன்னாள் அமைச்சர் அத்துலத்முதலி ஆகியோர் கொல்லப்பட்டமை குறித்து சில செய்தியாளர்கள் பொலீஸாரை துருவித் துருவி கேள்வி கேட்டு வந்தனர்.

அதனைத் தொடர்ந்தே ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இம்மாதிரி செய்தியாளர் துருவி கேள்வி கேட்பது கொலை விசாரணைகளை பாதிக்கும் என்று சட்ட மற்றும் பொலீஸ் அதிகாரிகள் கருதுகின்றனர்.

செய்தியாளர்கள், பொலீஸாரை கேள்வி கேட்டு விசாரணை நடத்துவது, நீதிமன்ற விசாரணைகள் நியாயமாக நடத்தப்படுவதற்கு அச்சுறுத்தலாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

# திரிபோஷா மாவுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 29

தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் குறைநிரப்பு உணவான திரிபோஷா மா வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியில் முடிவடைந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் திரிபோஷா தேவைப்படுவோருக்கு அதனை வழங்க முடியாதுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வட்டாரங்கள் தெரிவித்தன.

750 கிராம்களைக் கொண்ட 60 ஆயிரம் பக்கற்றுகள் மாதாந்தம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதிக்கு அனுப்பப்பட்டு வந்ததாகவும்—

கடந்த பெப்ரவரி மாதம் வந்த கப்பலில் 40 ஆயிரம் பக்கற்றுகளே அனுப்பி வைக்கப்பட்டதாகவும்.

அதன் பின்னர் திரிபோஷா மா அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-162)

## போதைப்பொருள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 29

கடந்த வெள்ளிக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய பெண் பிரயாணி கொண்டுவந்த கூடைக்குள் 7½ லட்சம் ரூபா பெறுமதியான 580 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. (த-3)

# உறுதிகளை உடன் பதியும் நடவடிக்கை நிறுத்தம்!

கொழும்பு, ஜூன் 29

எழுதப்படும் உறுதிகளை மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில் உடனே பதிவு செய்யும் முறை உடனடியாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

பதிவாளர் நாயகம் இதனை தெரிவித்திருக்கிறார்.

உறுதிகள் மெய்யான பெறுமதிகளைக் குறிப்பிடாமல் நொத்தாரிசுகளால் எழுதப்பட்டு பதிவுசெய்யப்படுவதாகக் கூறப்படும் முறைப்பாடுகளைத் தொடர்ந்தே எழுதப்படும் உறுதிகள் உடனடியாக பதிவு செய்யப்படுவதை நிறுத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

உறுதிகளைப் பதிவு செய்வதில் இடம்பெறும் துஷ்பிரயோகங்களைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரைகாலமும் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில் பதிவுசெய்யப்பட்ட சகல உறுதிகளும் மீளாய்வு செய்யப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மெய்யான பெறுமதியை உறுதிகளில் குறிப்பிடத்தவறும் நொத்தாரிசுகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

# போதிய தளபாடம் இல்லை ஆசிரியர்களும் இல்லை

## உடுப்பிட்டி அ. மி. கல்லூரியின் நிலை

யாழ்ப்பாணம், ஜூன் 29

உடுப்பிட்டிக் கொத்தணியில் உள்ள மூலாதாரப்பாடசாலையான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 1,300 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர்.

ஆனால் இப்பாடசாலையின் ஆரம்பவகுப்பு ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் போன்ற தரத்தில் உள்ள பலர் அடுத்தடுத்து இடம் மாற்றம் செய்யப்பட்டதால் இக்கல்லூரியின் கற்றலும், புறமுயற்சிகளும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம் ஆகியன மேற்கண்டவாறு சுட்டிக்காட்டி உள்ளன.

1987, 1989 ஆம் ஆண்டுகளின் இராணுவ நடவடிக்கைகளினால் இக்கல்லூரியின் கட்டடங்கள், தளபாடங்கள் ஆய்வு கூடங்கள் நூலகங்கள் முற்றாகவே அழிக்கப்பட்டன

இடம்பெயர்ந்து கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் இயங்கும் இக்கல்லூரியில் போதிய ஆசிரியர், தளபாடவசதிகள் இல்லை.

மரநிழல்களிலும் தனியார் கல்வி நிலையத்திலும் மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றனர்.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அராலிப் பகுதியில் பயிர்கள் கட்டாக்காலிகளால் அழிப்பு

அராலி, ஜூன் 29

அராலிப் பகுதியில் விவசாயப் பயிர்கள் கட்டாக்காலி மாடுகளால் இரவு வேளைகளில் அழிக்கப்பட்டு வருகின்றன.

மிகக் கூடுதலான பரப்பில் பயிரிடப்பட்டுள்ள குரக்கன், பயறு, கௌபி மற்றும் பம்பாய் வெங்காயம் மரக்கறிப் பயிர்கள் போன்றவை இரவு வேளைகளில் வயல்களில் நுழையும் கால் நடைகளால் அழிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக அராலி மத்தி, அராலி தெற்குவயல்களிலேயே கூடுதலாக அழிவு ஏற்படுகின்றது. இதனால் விவசாயிகள் தினமும் இரவில் கண்விழித்து இருந்து காவல் காத்து வருவதுடன் ஒரு சில விவசாயிகள் தங்கள் தோட்டங்களை கைவிட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வயலுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த மூன்று ஆடுகள் விவசாயிகளால் பிடித்துக் கட்டப்பட்டு பல நாட்களாக உரிமை கோரப்படாத காரணத்தால் அராலி தெற்கு கிராம உத்தியோகத்தர் பகிரங்க ஏலத்தில் அவற்றை விற்பனை செய்துள்ளார்.

அராலி வடக்கு, அராலி கிழக்கு துணைவிப் பகுதிகளைச் சேர்ந்த கால் நடைகளே இரவில் வயல் [illegible] அழிவை ஏற்படுத்துகின்றன [illegible] தெரிவிக்கப்படுகிறது. (இ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு கிறைண்டர்களும் ஒரு நம்.7 அல்லரும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 18, கொண்டலடிலேன், நல்லூர். (26255)

## புலமைப்பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழியில் உச்சப்புள்ளி பெற உதவும் ஒரேயொரு நூல் ''புலமைப்பரிசில் - மொழித் தேர்ச்சி'' அனைத்து வகை வினாக்களும் அடங்கியது. எங்கும் கிடைக்கும். (6294)

## மாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (6245)

## விஞ்ஞான விளக்கம்

ஆண்டு 10, பாடத்திட்டத்திலுள்ள பதின்மூன்று அலகுகளுடன் தொடர்பான அனைத்துவிஞ்ஞான விளக்கங்களைக் கொண்டது. எங்கும் கிடைக்கும். (6295)

## வறுமைநிவாரண உணவு முத்திரை

நவாலி, ஜூன் 29

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 8ஆவது தொடர் இலக்க வறுமை நிவாரண உணவு முத்திரைகள் அவ்வப்பகுதி கிராம சேவையாளர்களினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (இ-100)

## சங்கக்கிளை இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

காரைநகர் பல நோ.கூ.சங்கத்தின் வண்ணார்பண்ணை கிளை காங்கேசன்துறை வீதியில் உள்ள சிவலிங்கப் புளியடி, எம். யி. எம். பாய் கட்டடத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது. (இ)

## வரதருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 29

முதுபெரும் எழுத்தாளரான வரதருக்கு எதிர்வரும் வியாழன் பிற்பகல் 4-00 மணிக்கு பாராட்டுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளது.

தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்துக்கு திரு. க. சொக்கலிங்கம் தலைமை வகிப்பார்.

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. (இ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். பொறியியல் இணையம் ஏற்பாடு செய்துள்ள கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். ''வெளிநாட்டில் வதியும் பொறியியலாளர்களின் கண்ணோட்டத்தில் எமது பிரதேசத்தின் உட்கட்டுமானம்'' என்ற விடயம் பற்றி கலாநிதி ச. மகேஸ்வரன் சிறப்புரை நிகழ்த்துவார். (த)

## மணிமண்டபம்

கொழும்பு, ஜூன் 29

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்தமாக காரைதீவில் மணி மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த மணிமண்டபம் 45 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

# தேவை

பாதுகாப்புத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

நஷனல் பாதுகாப்புத் திட்டம்,
181/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(26278)

உ
சிவமயம்

## கைதடி வடக்கு அருள்மிகு கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தானம்

# வருடாந்த மஹோற்சவம்

நிகழும் ஸ்ரீமுக வருஷம் ஆனித் திங்கள் 10 ஆம் நாள் (24 - 06 - 1993) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

02 - 07 - 93 இரதோற்சவம் காலை 9-00 மணி
03 - 07 - 93 தீர்த்தோற்சவம் காலை 9-00 மணி
04 - 07 - 93 பூங்காவனத் திருக்கல்யாணம் மாலை 6-00 மணி

**தெய்வீகப் பேருரைகள்:**

24 - 06 - 93 முதல் 03 - 07 - 93 வரை சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் ( B.A. Dip - in - Edu , விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை) அவர்களால் தினமும் மாலை 7-30 மணி தொடக்கம் 8-30 மணி வரை தெய்வீகப் பேருரைகள் நடத்தப்படும்.

**சிறப்புச் சொற்பொழிவு:**

சிறப்பு நிகழ்ச்சியாக 03 - 07 - 93 சனி பகல் 12-30 மணிக்கு இணுவையூர் ஆறு. திருமுருகன் அவர்களால் சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்படும்.

அடியார்கள் அனைவரும் வருகை தந்து எம் பெருமான் முருகன் அருள்பெற வேண்டுகிறோம்.

: ஆலய பரிபாலன சபையினர்.

கைதடி வடக்கு. (26279)

# சீட்டிழுப்பு முடிவுகள்

27 — 06 — 1993 ஞாயிற்றுக்கிழமை கைதடி நவீல்ட் பாடசாலை, பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்.

முதலாவது பரிசு இல. 2747 — 7,500/-
இரண்டாவது பரிசு இல. 6747 — 5,000/-
மூன்றாவது பரிசு இல. 3516 — 2,500/-

ஆறுதல் பரிசுகள் தலா 500/-
7128, 935, 7540, 131, 1242,
7434, 3823, 6049, 1644, 7462.

க. இரத்தினேஸ்வரன்,
தலைவர்.
(26275)

# ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில்: 08 — 11 — 1970



ஆண்டவன் அடியில்: 10 — 07 — 1992

## செல்வி ரஜனி இலங்கராஜா

(உடுவில் மகளிர் கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவி)

திதி: 29 — 06 — 1993

உயிரினும் இனிய உயிராய் எம்மிடை மலர்ந்த பூவே!
இறைவன் பாதக் கமல உறவினுள் வாழும் உயிரே!
ஈர்பதினோர் வயதில் எமது உறவினைப்
பிரிந்த அன்பே!

இன்றுடன் உமது பிரிவு ஓராண்டு நிறைவு பெற்றும்,
உங்களின் இனிய நினைவு உறவெனும் வாட்டுதம்மா
நினைவுகள் கொண்டே மேலும்-
இறைவனை வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:

அப்பா, அம்மா, அண்ணா (லண்டன்),
தம்பி (லண்டன்), தங்கை, அம்மம்மா,
ஐயா, [illegible]

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
(5975)

குமணவில் எடுத்து வரப்பட்ட

# தளபாடங்கள் அனைத்தும் வடமராட்சி கிழக்கிற்கு

யாழ். மாவட்டத்துக்கென குமண கப்பலில் எடுத்துவரப்பட்ட தளபாடங்கள், அனைத்தும் இம்முறை வடமராட்சி கிழக்குப் பிரதேச பாடசாலைகளுக்கே வழங்கப்பட்டுள்ளன.

இத்தளபாடங்கள் அனைத்தும்பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டு, வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளுக்கு வடமராட்சி கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. ச.செல்லத்துரையின் பணிப்பின் பேரில் எடுத்துச் செல்லப்பட்டன. (இ-87)

# யாழ். வைத்தியசாலைக்கு 27 தாதிகள் நியமனம்

அண்மையில் நடந்து முடிந்த தாதிகளுக்கான இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் 27 தாதிகள் யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கென நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் யாழ். வைத்தியசாலையில் கடமைக்கு செல்லுமாறு சுகாதார மகளிர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பு வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்படி 27 தாதிகளையும் ஜூலை முதலாம் திகதி முதல் வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு பணிப்பாளர் செல்வி க. நவமலர் கேட்டுள்ளார். (த-17)

# பச்சிலைப்பள்ளி பகுதியில் அபிவிருத்தித் திட்டங்கள்

தென்மராட்சி, ஜூன் 29

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் ஜனசவியத் திட்டத்தின் கீழ் பல அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வேம்போடுகேணி, புலோப்பளை கிழக்கு, தர்மக்கேணி ஆகிய பிரிவுகளில் கிடுகு பின்னல் வேலையும் —

பளை நகரம், கச்சாய் வெளி ஆகிய பகுதிகளில் கோழி வளர்ப்பு — மாசார், கோவில் வயல், இயக்கச்சி, முகாவில் பகுதிகளில் ஆடு வளர்ப்புத் திட்டங்களும் —

முகமாலை, அரசர் கேணிப் பகுதிகளில் குளங்களை ஆழமாக்கி விவசாய முயற்சிகளை மேற்கொள்ளும் திட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்பட்டு வருகின்றன. (த-117)

# உழைப்பாளியை இழந்த குடும்பங்களுக்கு உதவு திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

உழைப்பாளியை இழந்த குடும்பங்களுக்கான ஊக்குவிப்புத்திட்டம் ஒன்றை வட பிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாசம் ஜூலை மாதம் முதல் அறிமுகப்படுத்தவுள்ளது.

ஒவ்வொரு வர்த்தக சங்கப் பிரதேசத்தில் இருந்தும் 5 குடும்பங்கள் என்ற அடிப்படையில் இந்த உதவி வழங்கப்படும்.

உழைப்பாளியை இழந்த குடும்பங்களின் தொழில்சார்ந்த தொழிலுக்கு அல்லது கல்விக்கு என இந்த உதவிப் பணம் வழங்கப்படும். நேரடிச் செலவுகளுக்காக உதவி வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த- 162)

மீசாலை

## சித்திர வேலாயுத சுவாமி கோவில் திருப்பணி நிதிக்கான

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு — 5796
இரண்டாம் பரிசு — 3673
மூன்றாம் பரிசு — 5850

ஆறுதல் பரிசுகள்:

1. 5143
2. 1299
3. 2278
4. 2786
5. 5940

10-07-1993க்கு முன் ரிக்கற்றினை ஒப்படைத்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

— ஆலய பரிபாலன சபை.

(26276)

## செம்மணி இந்து மயான

# அபிவிருத்தி பராமரிப்புச் சங்கம்

செங்குந்த இந்துக் கல்லூரி மண்டபத்தில் 26 - 07 1992 ஆம் திகதி நல்லூர் லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்த மேற்படி மயான அபிவிருத்தி பராமரிப்பு பற்றிய அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களை 30 - 06 - 1993 புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு இக் கல்லூரி மண்டபத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இக் கூட்டத்தில் நிர்வாக உறுப்பினர்கள் பங்குபற்றத் தவறின், மயான பராமரிப்பு அலுவல்களை நல்லூர் லயன்ஸ் கழகம் பொறுப்பேற்று நடத்தும் என்பதை தெரிவிக்க விரும்புகிறோம்.

வ. பரமசிவம்,
ந. ல. கழக தலைவரும்,
செ. இ. ம. அ. பராமரிப்பு சங்க-
உப தலைவரும்.

(26280)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உலகளாவிய சர்வாதிகாரப்!

அமெரிக்கா, இருந்தாற் போல, திடீரென ஈராக் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறது. வளைகுடாவில் நிலைகொண்டுள்ள யுத்தக் கப்பல்களில் இருந்து தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. அதிகாலைப் பொழுதில், ஒருசில மணித்தியாலங்களில், மொத்தம் இருபத்துமூன்று ஏவுகணைகளை கொண்டு ஈராக்கிய புலனாய்வுத்துறைத் தலைமையகக் கட்டடம் தாக்கப்பட்டது. அதன் விளைவாக, ஈராக்கியப் பொதுமக்கள் ஆறுபேர் பலியாக நேர்ந்தது.

சொல்லாமல் கொள்ளாமல், எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல், முன்னெச்சரிக்கை எதுவுமின்றி, காரணம் கூறாமல் நினைத்த மாத்திரத்தே திடீரென நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் கண்டனத்துக்கு உரியதாகும்.

தன்னைத் தட்டிக்கேட்க எவருமில்லை என்ற இறுமாப்புடன் அமெரிக்கா இந்தவித நடவடிக்கைகளில் ஈடுபடுவது இது முதலாவது சம்பவமன்று. சோவியத் ரஷ்யா உடைந்து சின்னாபின்னமாகி விட்ட எக்களிப்பில், தனக்கு நிகரான வல்லரசு ஒன்று இல்லை என்ற மமதையுடன் தானே இந்தப் பூகோளத்தின் எசமானன் என்ற எண்ணத்துடன் அமெரிக்கா செயற்படுகிறது.

உடைந்துபோன சோவியத் நாடுகள் சோற்றுக்கு வழியில்லாத கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டதால் தனக்கு நிகரான வலுவுடன் வேறு எந்த நாடும் வல்லரசாக வளரமுடியாது என்று அமெரிக்கா நினைக்கிறது.

புதிய சூழ்நிலையில், தானே உலகத்தின் பொலிஸ்காரன் என்றும், தான் நினைப்பதும் செய்வதுமே சரி என்ற சிந்தனையும் அமெரிக்காவிடம் தலைக்கேறி விட்டது. தனது அதிகாரத்தைத் உலக ரீதியில் நிலைநாட்டும் வகையில் அது நடந்து கொள்கிறது. தன்னுடன் பகைமை பாராட்டி நினைக்கும் எந்த நாட்டையும் தான் நினைத்தவாறு தண்டிக்கலாம் எனவும் எண்ணுகிறது. கெடுபிடி யுத்தத்துக்குப் பதிலாக வல்லாதிக்க யுத்தங்களை நடத்துவதற்கு அது முனைகிறது!

காரணம் கூறாமல் ஒருவனைக் கைது செய்ய முடியாது என்பது சாதாரண விதி. காரணம் தெரிவித்துக் கைது செய்தாலும் அவனை அடிக்கக் கூடாது என்பதும் பொதுவான விதியே. ஆனால் காரணம் கூறாமலே ஈராக்கை அடித்து விட்டு, அதன் பின்னர் ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறது அமெரிக்கா! புதிய உலக ''நீதி''யை, நியதியைத் தோற்றுவிக்க அது முயல்கிறதா?

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட சதியில் ஈராக்குக்கும் பங்கு உண்டு என்பதே அந்தக் குற்றச்சாட்டு. குற்றச்சாட்டு உரிய விதிப்படி நிரூபிக்கப்படாமலே, அமெரிக்கா தண்டனை வழங்கி இருக்கிறது! விசாரணையோ தீர்ப்போ இல்லாமல் தனது போக்கில் எதேச்சாதிகாரமாகத் தண்டனை விதித்தது மட்டுமல்லாமல், அமெரிக்காவுக்கு எதிரான எந்த நடவடிக்கைக்கும் பதிலடி கிடைக்காமற் போகாது என்றும் கிளின்டன் உலகத்தை அச்சுறுத்தி உள்ளார்!

தனது வல்லாதிக்கத்தையும், அதிகாரத் தனத்தையும் காட்டிவிட, அதற்கு ஐ. நா. வின் உத்தியோகபூர்வ முத்திரையைக் குத்த அமெரிக்க முனைந்திருப்பதாகப் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் போக்கு நிச்சயமாக அமெரிக்காவே உலகத்தின் சர்வாதிகாரியாக மாறும் நிலைக்கு இட்டுச் செல்லும். உலகளாவிய ரீதியில் அது ஏகாதிபத்தியத்தை அனுபவிக்க வகை செய்யும்.

---

### தடை நீக்கப்பட்ட..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உத்தரவிட்டுள்ளார்.

இத்தகவலை அவரே லங்காபுவத் செய்தி ஸ்தாபனத்துக்கு தெரிவித்தார் என இலங்கை வானொலி நேற்று மாலை அறிவித்தது.

முன்னர் திட்டமிட்டபடி அக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்துக்குச் செல்லாது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை —

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றுக் காலை கொழும்பு திரும்பிய அரசுத் தூதர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா, நேற்றுப் பிற்பகல் லங்கா புவத்துக்கு அளித்த பேட்டியில் —

34 போர்க் கைதிகளையும் விடுதலை செய்வது என்று அளித்த உறுதி மொழியில் இருந்து விடுதலைப் புலிகள் பின்வாங்கி விட்டனர் என்று தெரிவித்தார்.

''சில பொருள்கள் மீது விதிக்கப்பட்ட தடையைத் தளர்த்துவதான தனது உறுதி மொழியை அரசு நிறைவேற்றியுள்ளது. தடை செய்யப்பட்டிருந்த ஏழு பொருள்களையும் ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது

''எஞ்சிய போர்க்கைதிகளை அழைத்துவர நான் யாழ்ப்பாணத்துக்குக் கடந்த ஞாயிறு சென்றபோது, விடுதலைப் புலிகள் புதிய கோரிக்கைகளை முன்வைத்தனர்'' — என்றும் அவர் கூறினார்.

''நான் யாழ்ப்பாணம் செல்வதற்கு முந்திய தினம் விடுதலைப் புலிகள் அங்குள்ள திணைக்களங்களின் தலைவர்களை அழைத்து புதிய கோரிக்கையைத் தயாரித்தனர். அக்கோரிக்கை யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது'' — என்றும் பிரிகேடியர் வீரசேகரா லங்காபுவத்துக்குத் தெரிவித்துள்ளார்.

(உ-எ)

---

### மீண்டும்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக நான் முன்வைத்த சமாதான யோசனைத்திட்டங்கள் இன்னமும் பொருத்தமானவையாகவே இருக்கின்றன. எனது இந்த யோசனைகளை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா ஒரு போதும் நிராகரித்ததில்லை.

புதிய சமாதான முன்முயற்சிகளை மேற்கொள்வதற்கு அரசிடமிருந்து உகந்த பிரதிபலிப்பு வருவதற்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன் — என்றார்.

(உ-3)

---

### விடுதலைப்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இதனையடுத்து அவ்விடத்துக்கு விரைந்து சென்ற விடுதலைப் புலிகளின் மற்றொரு அணியினர், பதுங்கியிருந்த இராணுவத்தினரைச் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தினர்.

நான்கு மணிநேரம் அப்பகுதியில் கடும் சண்டை இடம்பெற்றது.

படையினருக்கு உதவியாக ஹெலி ஒன்று, புக்காரா விமானம் ஒன்று, சியாமாக்செட்டி ரக விமானம் ஒன்று ஆகியன குண்டு வீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களை நடத்தின

இவற்றுக்கு மத்தியில் விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் நடத்தி இராணுவத்தினரைப் பின்வாங்கச் செய்தனர்.

இச்சண்டையில் ஸ்ரீலங்கா இராணுவ தரப்பில் பலத்த இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

தமது தரப்பில் ஒரு இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் —

மேலும் எழுவர் காயமடைந்ததாகவும் ஸ்ரீலங்கா அரசு கூறியுள்ளது

ஸ்ரீலங்கா இராணுவம் பின்வாங்கிய வேளை — பின்வாங்கிய பகுதியில் — இரு ஹெலி இறங்கிச் சென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

---

# உண்மையாக சமாதானத்தை புலிகள் விரும்புகிறார்கள்

## கடந்த வாரம் பிரிகேடியர் வீரசேகரா பேட்டி

கொழும்பு, ஜூன் 29

''இந்தத் தடவை தமிழீழ விடுதலைப்புலிகள் உண்மையாக சமாதானத்தை விரும்புகின்றார்கள்.''

அரசின் தூதர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா லங்காபுவத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்க நிலையில் சிக்கல் ஏற்படுவதற்கு முன்னர் — கடந்த வியாழனன்று — கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றில் இப்பேட்டி பிரசுரமாகியிருந்தது.

அமைதிப் பேச்சுவார்த்தைகளை தொடருவதற்கு முன்னோடியாக போர்க் கைதிகளின் விடுதலை வழிகோலலாம் என்று விடுதலைப்புலிகள் நம்புவதாக விடுதலைப் புலிகள் இயக்க ஆலோசகர் டாக்டர் அன்ரன்பாலசிங்கம் கடந்த வாரப் பேச்சுகளின் போது தம்மிடம் தெரிவித்ததாக பிரிகேடியர் வீரசேகரா அப்பேட்டியில் தெரிவித்தார்.

எவரும் யுத்தத்தை விரும்பவில்லை என்றும் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் அப்போது தம்மிடம் தெரிவித்ததாகவும் பிரிகேடியர் தெரிவித்தார்.

சமாதானத்தில் விடுதலைப் புலிகள் அக்கறை கொண்டிருப்பது போல் தெரிகிறது என்றும் அவர் சொன்னார்.

# சித்த ஆயுள்வேதக் கல்லூரியை மாகாண அரசு பொறுப்பேற்கும்

வடஇலங்கை லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியினை வடக்கு - கிழக்கு மாகாண அரசு பொறுப்பேற்க உள்ளது. கடந்த 68 வருடங்களாக தனியார் நிறுவனமாக இயங்கும் இக்கல்லூரி நாளை மறுதினம் — ஜூலை முதலாம் திகதி — தொடக்கம் வடக்கு—கிழக்கு மாகாண அரசின் சுகாதார மகளிர் விவகார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் வருகிறது.

பிரஸ்தாப கல்லூரிக்கென மாகாண சபை சுமார் நான்கு லட்சம் ரூபாவை மானியமாக வழங்கியுள்ளது. அடுத்த மாதம் தொடக்கம் கல்லூரியின் சகல ஊழியர்களுக்கும் மாதாந்தச் சம்பளம் வடக்கு —கிழக்கு மாகாண சபையின் சுகாதார மகளிர் விவகார அமைச்சின் நிதியிலிருந்து வழங்கப்படும் என்று பிரஸ்தாப அமைச்சின், மாற்று முறை மருத்துவத்துக்கான பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பூ உரோம மகேஸ்வரன் தெரிவித்தார்.

நிதி வசதியற்ற நிலையில் இப்போது பலவித கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் வடஇலங்கை லங்கா சித்த ஆயுள் வேத மருத்துவக் கல்லூரியை மாகாண அரசு பொறுப்பேற்பதால் அது வளர்ச்சி அடைய வாய்ப்புண்டு என்று வட இலங்கை சுதேசிய மருத்துவ சபையின் தலைவர் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தெரிவித்தார்.

(அ)

# தனி ஈழம் அமைக்க ராஜீவ் புலிகளுடன் இணங்கியிருந்தார்

## கொலை வழக்கில் எதிரி தரப்பு சட்டத்தரணி வாதம்

சென்னை, ஜூன் 29

படுகொலை செய்யப் படுவதற்கு சில வாரங்கள் முன்பதாக ராஜீவ் காந்தி, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் தூதர்களுடன் நடத்திய பேச்சுக்களின் போது, தமிழ் ஈழம் அமைப்பதற்கு பெரும்பாலும் இணக்கம் தெரிவித்திருந்தார்.

ராஜீவ் கொலை வழக்கின் அரசு தரப்புச் சாட்சிகள் சிலர் இது தொடர்பாக விசேட புலனாய்வுக் குழுவிடம் வாக்கு மூலம் அளித்துள்ளனர்.

தனிநாடு அமைப்பது தொடர்பாக ராஜீவ் காந்திக்கும் புலிகளுக்கும இடையே காணப்பட்டிருக்கும் இந்த இணக்கப்பாடு, ராஜீவ் காந்தி கொலையில் புலிகள சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்ற குற்றச் சாட்டு தவறானது என்பதை நிரூபித்து நிற்கிறது.

—இவ்வாறு எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களில் ஒருவரான திரு. ரி. இராமதாஸ், ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் வாதாடுகையில் தெரிவித்தார்.

வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சிலரை விடுதலை செய்யவேண்டும் என்ற மனு மீது வாதாடுகையில்—

''தாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழ் ஈழம் அமைக்க உதவுவதற்கு ராஜீவ் பெரும்பாலும் சம்மதம் தெரிவித்திருந்தார் என வழக்கறிஞர் ராமதாஸ் குறிப்பிட்டார்.

முக்கிய இப் பேச்சுகள் புதுடில்லியில் நடந்த சமயம் ஸ்ரீபெரும்புதூருக்கு ராஜீவ் விஜயம் செய்யவிருப்பது பற்றிய பேச்சே இடம்பெறவில்லை. தமிழகத்துக்கு மே 21 அன்று ராஜீவ் விஜயம் செய்வது என்றும் இருக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

''மே 20 இல் ராஜீவ்காந்தி பயணம் செய்த விசேட விமானத்தில், விசாகப் பட்டினத்தில் வைத்து இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. அது பற்றி விசேட புலனாய்வுக்குழு விசாரிக்கவில்லை. கொலைச் சதி அங்குதான் உருவானது என்று நாம் நம்புகின்றோம்.

''இயந்திரக் கோளாறு காரணமாக சென்னைப் பயணம் முதலில் ரத்துச் செய்யப் பட்டது. ஆனால் அடுத்த 30 நிமிடங்களில் அவ்விமானம் சென்னை செல்வதற்கு தயாராக இருந்தது. இப்படு கொலையில் ஈ. பீ. ஆர். எல். எவ். அமைப்பைச் சேர்ந்தவர்கள் சம்பந்தப்பட்டிருந்தார்களா என்பது குறித்து விசேட புலனாய்வுக்குழு விசாரிக்க வேண்டும்'' — என்றும் அவர் வாதாடினார்.

### குமண புறப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 29

பருத்தித்துறையில் தரித்து நின்ற 'குமண' கப்பல் 96 பயணிகளை ஏற்றிக் கொண்டு நேற்று திருகோணமலைக்குப் புறப்பட்டது.

அரசு ஊழியர்கள் மற்றும் நல்லை ஆதீன முதல்வர், யாழ். மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் ஆகியோர் இக்கப்பலில் புறப்பட்டுச் சென்றனர்

வெளியூர்களுக்கான 41 தபால் பொதிகளும் இக்கப்பலில் எடுத்துச் செல்லப்பட்டன.

(உ-87-17)

---

### புலிகளுடன்...

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தக் கைதிகள் விவகாரம் தொடர்பாகபுலிகளின் கோரிக்கைக்கு அரசு இணங்கப் போவதை கொழும்பில் பாதுகாப்பு உயரதிகாரிகள் பலர் ஆரம்பம் முதலே எதிர்த்து வந்தனர் என்றும்-

அவர்கள் உயரதிகாரிகள் மத்தியில் தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவு திரட்டி புலிகளுடன் அரசு கண்ட இணக்கத்தை முறியடித்திருக்கின்றனர் என்று அவர் மேலும் சொன்னார்

இராணுவஉயரதிகாரிகளின் அதிருப்தி நிலையை எதிர் கொள்ள முடியாத அரசு தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கியிருப்பதாகத் கருதப்படுகிறது.

(உ-3)

---

### உபகரணங்களை..

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரேணுகா ஹோரத் உறுதியளித்துள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிப்பதாகவும் —

ஆனால் இது பற்றிய தீர்மானம் எதுவும் இதுவரை [illegible] டாரங்கள் தெரிவித்தன.

(த-17)

### இன்று வரும்

தடை நீக்கப்பட்ட பொருள்களை ஏற்றிக் கொண்டு கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட 'ருகுணு' கப்பல் இன்று மாலை காங்கேசன்துறையை வந்தடையும் என நேற்று மாலை தகவல் கிடைத்தது.

இந்தக் கப்பல் காங்கேசன் துறையில் இருந்து நாளை காலை பருத்தித்துறைக்கு வருமா? அல்லது காங்கேசன் துறையிலேயே தரித்து நிற்குமா? — என்பது குறித்து நேற்று மாலை வரை முடிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

## பூநகரிப் பாதை விவகாரம்:

# ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகள் இன்று வருவர்

யாழ்ப்பாணம், ஜூன் 29

பூநகரி பாதையைத் திறப்பது குறித்து பேச்சுக்கள் நடத்த அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் உயர் அதிகாரிகள் இருவர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்கள்

நேற்று பலாலி வந்து சேர்ந்த அந்த அதிகாரிகள், காங்கேசன்துறையில் இருந்து ''வாதுவ'' கப்பல் மூலம் இன்று காலை பருத்தித் துறைக்கு வந்து சேருவர்

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் இன்று அவர்கள் பேச்சு நடத்துவர்.

கேரதீவு பாதைப் பகுதியை அவர்கள் நாளை பார்வையிடவும் ஏற்பாடாகியுள்ளது.

(உ-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் பேசுக! காமினி கோரிக்கை

கொழும்பு, ஜூன் 29

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுகள் நடத்தப்படுவதை தாம் ஆதரிப்பதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார்.

கொழும்பு வை எம்.சி.ஏ. நடத்திய கருத்தரங்கு ஒன்றில் அவர் பேசிய போது முன்கண்ட கருத்தை வெளியிட்டார்.

''பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்று மீண்டும் மீண்டும் விடுதலைப் புலிகளுக்கு நாம் சொல்ல வேண்டும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை வார்த்தைக்கு வார்த்தை தாம் ஆதரிப்பதாகக் கூறிய அவர், அந்த ஒப்பந்தத்தை பூரணமாக அமுல் நடத்த வேண்டும் என்றும் சொன்னார்.

''நாட்டின் சனத் தொகையின் நான்கில் ஒரு பங்கினர் பௌத்தரல்லாத — சிங்களவரல்லாத — மக்கள் என்ற யதார்த்தத்தை, சிங்களத் தலைவர்கள் புறக்கணித்து, இலங்கையை பௌத்த நாடு எனக் கருதினார்கள். அதனால் தான் இனப்பிரச்சினை உருவானது.

நன்றாகத் தெரிந்த சரித்திர உண்மைகள் தவறாக எடுத்துக் கூறப்பட்டதன் விளைவே இன்றைய பௌத்த சிங்கள கருத்தாக அமைந்துள்ளது.

''எல்லாளன் — துட்டகமுனு யுத்தம் சிங்கள — தமிழ் யுத்தமாகக் கூறப்பட்டது. ஆனால் எல்லாளன் தரப்பில் சிங்கள ஜெனரல் ஒருவர் யுத்தத்தில் ஈடுபட்டார். துட்டகமுனு தரப்பில் தமிழ்ப் படையினர் போரிட்டனர்.

''வடக்கு - கிழக்கு நெருக்கடியையும் இனப்பிரச்சினையையும் தனித்தனியாகப் பார்க்க வேண்டும். இனப்பிரச்சினையின் விளைவாக ஏற்பட்டதே வடக்கு கிழக்கு நெருக்கடியாகும்.

மலையகத் தமிழர், இலங்கைத் தமிழர், வடக்கு - கிழக்குக்கு வெளியேயுள்ள தமிழர், முஸ்லிம்கள் ஆகியோரின் உரிமைகள் சம்பந்தப்பட்டதே இனப்பிரச்சினை ஆகும்.

''இப்பிரச்சினையைத் தீர்க்கத் தவறியதன் பலனாக கொழும்பு இன்று வாழமுடியாத அளவு அபாயகரமான இடமாக மாறியுள்ளது.

''கடற்படைத் தளபதி,



அமிர்தலிங்கம், முன்னாள் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா ஆகியோர் கொழும்பில் வைத்தே கொல்லப்பட்டனர்.

முப்படைகளின் பிரதம தளகர்த்தரான ஜனாதிபதி பிரேமதாசாவும்" கொழும்பில் வைத்தே கொல்லப்பட்டார்.

இனப்பிரச்சினை அனைத்து இலங்கையரின் பிரச்சினையாக மாறி உள்ளது. இப்பிரச்சினை மனிதப்பிரச்சினையாக வளர்ச்சி அடைந்துள்ளது.

''ஜனாதிபதியாக இருந்த போது பிரேமதாசா தாம் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சின் விவரங்களை அமைச்சரவைக்கு ஒன்பதரை மாதங்களாகத் தெரிவிக்கவில்லை.

''இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது யோசனைத் திட்டத்தை ஐக்கிய தேசியக்கட்சி மக்கள்முன் வைக்காது இருந்து வருகிறது.'' — என்றும் அவர் சொன்னார்.

இக்கருத்தரங்கில் பேசிய தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலமும், முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரபும் தாங்கள் இந்திய— இலங்கை ஒப்பந்தத்தை நிராகரிப்பதாகக் கூறினார்கள்.

அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தைப் பலப்படுத்த வேண்டும் என்று குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களின் நலன்களை இந்திய - இலங்கை ஒப்பந்தம் கவனிக்கவில்லை என ஜனாப் அஷ்ரப் தெரிவித்தார். (இ-எ)

## டி.ஐ.ஜி உடுகம்பொல அமெரிக்கா செல்வார்

கொழும்பு, ஜூன் 29

தலைமறைவாகியிருந்த பின் இந்தியாவிலிருந்து கொழும்பு திரும்பிய பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல, தமது மனைவி மற்றும் குடும்பத்தவர்களைச் சந்திப்பதற்காக அமெரிக்கா செல்லவிருக்கிறார்.

பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் — தம்மைக் கைது செய்வதற்காக ஜனாதிபதி பிரேமதாஸா வழங்கிய உத்தரவு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சென்றடைய முன்னர், அது பற்றித்தான் தெரிந்து கொண்டதாகவும்—

தம்மைக் கைது செய்ய அரசு எடுத்த முயற்சி குறித்து முக்கிய அமைச்சர் ஒருவர் தமக்கு நேரத்துடன் தெரியப்படுத்தியதனால்தான் இன்று தாம் உயிருடன் இருப்பதாகவும் உடுகம்பொல கூறினார்.

தலைமறைவாக இருந்த காலத்தில் தனது சகோதரரின் இறுதிச் சடங்குகளுக்கு உயர் பொலீஸ் அதிகாரிகள் பலருடன் தான் சென்றதாகவும் அவர் சொன்னார்.

தன்னைக் கைது செய்தால் உயிருடன் தன்னை வைத்திருக்க வேண்டாம் என சம்பந்தப்பட்ட பொலீஸ் பிரிவுகளுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடும் பாதுகாப்புக்கு மத்தியிலும் தாம் தப்பிச்செல்வதற்கு அமைச்சர் ஒருவரும் உயர் பொலீஸ் அதிகாரிகளும் உதவினார்கள் என்றும் அவர் சொன்னார். (உ-6)

## பிரேமா வீட்டருகே இருந்த பாதைத்தடைகள் நீக்கம்

கொழும்பு, ஜூன் 29

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் சுசரித்த இல்லத்திற்கு அருகில் இருந்த தியவணைப்பு நிலையம் கடந்த வெள்ளியன்று மூடப்பட்டது.

இதே வேளை — சுசரித்த சுற்றுவட்டாரத்தில் மூடப்பட்டிருந்த சகல பாதைகளும் இப்போது போக்குவரத்திற்காகத் திறந்து விடப்பட்டுள்ளன. அப்பகுதிகளில் இருந்த பொலீஸ் சென்றிகளும் பாதைத் தடைகளும் அகற்றப்பட்டுள்ளன (உ-3)

## பாடசாலைகளில்

கோப்பாய் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அதிபர் திரு. க. தனபாலசிங்கம் தலைமையில் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும். மருதனாமடம் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரட்ணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-152)

## விளையாட்டு நிகழ்வு

யாழ். புனித அடைக்கல மரியாள் விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்திவரும் விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று மாலை புனித மரியாள் வித்தியாலய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு.

★ தீவகம் காந்திஜி அணி எதிர் அரியாலை ஐ. வி. க. அணி

★ கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி அணி எதிர் நாவாந்துறை சென். மேரிஸ் அணி. (உ)

## மரண அறிவித்தல்கள்

### செ. இரத்தினதுரை

(இளைப்பாறிய ஆசிரியர்)

உரும்பராயைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் கம்பனை அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் செ. இரத்தினதுரை 26 - 6 - 93 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா அன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், கமலாசினியின் அன்புக் கணவரும், முரளீதரன் (கணக்காளர், கொழும்பு), தயாபரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நவரத்தினம் (மணியம் — இளைப்பாறிய இ. போ. ச. உத்தியோகத்தர்), அழகரத்தினம், கனகலிங்கம், காலஞ்சென்ற பஞ்சலிங்கம், செல்வரத்தினம், திருமதி சரோஜினிதேவி — கைலாசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், சேதுகாவலர் (போதனா வைத்தியசாலை, கண்டி), காலஞ்சென்ற வைத்திய கலாநிதி இராசரத்தினம் (மணி), கைலாசபிள்ளை (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27 - 6 - 93 ஞாயிறன்று நண்பகல் சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கம்பனை, சுழிபுரம்.

திருமதி கமலாசினி இரத்தினதுரை (மனைவி)

(26288)

### திருமதி சிவசக்தி

திரு. ரவிதாஸ் (கனடா) அவர்களின் அன்பு மனைவி திருமதி சிவசக்தி கனடாவில் காலமாகிவிட்டார்.

அவர் காலஞ்சென்ற திரு. சிவலிங்கத்தினதும், திருமதி வள்ளிநாயகி சிவலிங்கத்தினதும் அன்பு மகளும், சி. சத்தியமூர்த்தி, திருமதி விஜயலட்சுமி ஜெயகாந்தன், சி. சத்தியகுமாரன் (சுவீடன்), சி. சத்தியபாலன் (சுவிஸ்), சி ஜெயக்குமார் (நோர்வே), சி. விஜயராஜன் (நோர்வே), திருமதி கலைவாணி கனகராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தங்கையும், இ. சிறிகுமாரின் அன்புச் சகோதரியும், திரு. திருமதி முத்தையாவின் அன்பு மருமகளும், மு. ஆறுமுகதாஸ் (கருணா - C. T. B.), மு. ஜெகதாஸ் (நோர்வே), மு. சுகந்தினி (நோர்வே), திருமதி சி. சத்தியமூர்த்தி (ஆசிரியை மல்லாகம் ம. வி), திருமதி க. ஆறுமுகதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26 - 6 - 93 கனடாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

நீதிமன்ற வீதி, மல்லாகம். (26286)

சி. சத்தியமூர்த்தி (சகோதரன்)

### கனகசபை சச்சிதானந்தன்

நயினாதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்ட மணியம் என்று அன்பாக அழைக்கப்படும் கனகசபை-சச்சிதானந்தன் (தபால் ஊழியர் நயினாதீவு) 25-06-1993இல் திருகோணமலையில் காலமானார்.

இவர் கனகசபை தங்கம்மா ஆகியோரின் மகனாரும், யசோதரதேவி (தேவி) அவர்களின் கணவரும், பரியோவான் கல்லூரியில் கடமையாற்றிய பொன்னம்பலம் நாகம்மா ஆகியோரின் மருமகனும், மதிவதனன் (சுவிஸ்), மாலினி, மோகனராஜன் (கனடா), பாமினி ஆகியோரின் தந்தையாரும், நடராசா (சுவிஸ்), கலைநாதன், அன்னலெட்சுமி, பாக்கியலெட்சுமி ஆகியோரின் சகோதரரும், மகேஸ்வரன் (யாழ் அஞ்சலகம்), இராசலெட்சுமி (வவா), சாரதாதேவி செல்வரெட்டினம் (செல்வம்-இ. போ. ச. கோண்டாவில்), சுந்தரலிங்கம் (சுந்தரம்), வேதாரோகிணி, தவஈஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சிவசுப்பிரமணியம் (இ மி. சபை), மகேந்திரன் (இத்தாலி), லீலாவதி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 26-06-1993 இல் திருகோணமலையில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வே. பொன்னம்பலம் (மாமனார்).

97/11, ஆனந்தன் வடலி றோட், அரியாலை.

[26273]

### வஸ்தியாம்பிள்ளை அலோசியஸ் (WATER SUPPLY)

நாரந்தனை மேற்கை பிறப்பிடமாகவும், 13B மூளாய் ஒழுங்கை, சுண்டுக்குளியில் வசித்தவருமான வஸ்தியாம்பிள்ளை அலோசியஸ் (முன்னாள் நீர்விநியோகசபை) 28-06-93இல்காலமானார். அன்னார் லூர்தம்மாவின் அன்புக் கணவரும், மனோகரன் (சுவிஸ்) காலஞ்சென்ற ஜெயசீலன் (இராசு), ராஜினி, காலஞ்சென்ற எட்மன் (பொலீஸ்), ரஞ்சனி (தாதி யாழ். போதனா வைத்தியசாலை), சுபோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னமேரி (விளான்), ஜெயமணி (M. P. C. .S மன்னார்), நாதன், சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜந்தன், கிங்ஸ்ரன், ஷாளினி, மனோஜ் ஆகியோரின் பாசமுள்ள பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (29 - 06 - 1993) காலை 9 மணிக்கு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

அ. நாதன் (மருமகன்)

13B, மூளாய் ஒழுங்கை, சுண்டுக்குளி.

(26281)

## மரண அறிவித்தல்

### லூக்காஸ் அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய புகையிரதப்பகுதி உத்தியோகத்தர்)

மல்லாகம் குளமங்காலைச் சேர்ந்த லூக்காஸ் அந்தோனிப்பிள்ளை 26-06-1993 சனிக்கிழமை அன்று நீர்கொழும்பில் காலமானார்.

இவர் ஞானசோதியின் அன்புக் கணவரும், ஞானசேகரன், குலசேகரன், சந்திரசேகரன், குமாரசேகரன், இராஜசேகரன், இரத்தினசேகரன், திலகசோதி, புனிதசோதி, வசந்தசோதி, அமலசோதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

(5976)

ஏ.வீ. ஆனந்தன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 898/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29-06-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org